## வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### பரதநாட்டியம்

Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office

சுட்டெண் ..................................................... **தரம்: 06** **நேரம் - 2.00 மணித்தியாலம்**

பகுதி I

**01) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) முருகனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்
   1) காவடி   2) கரகம்   3) கும்மி   4) கோலாட்டம்

2) தியான ஸ்லோகத்தில் இடம்பெறும் ஸம்யுத ஹஸ்தங்களாவன.
   1) அலபத்மம், சதுரம்   2) அஞ்சலி, சிவலிங்கம்
   3) சூசி, முகுளம்   4) சந்திரகலா, கம்சாசியம்

3) நாட்டடவு அமைந்துள்ள தாளம்?
   1) ரூபகம்   2) ஜம்பை   3) மட்டியம்   4) ஆதி

4) பிரலம்பம், காங்கூலபேதம் என்பன?
   1) ஒற்றைக்கை முத்திரை   2) இரட்டைக்கை முத்திரை
   3) அபூர்வ முத்திரை   4) யாவும் பிழை

5) எட்டாவது தட்டடவில் அமைந்துள்ள கால் தட்டுக்களின் எண்ணிக்கை?
   1) 8   2) 7   3) 6   4) 5

6) சதுஸ்ர ஜதிக்குரிய சொற்கட்டாக அமைவது?
   1) தக தகிட   2) தகிட   3) தகதிமி   4) தக

7) நாட்டியம் ஆடப்படும் ஒழுங்குமுறையைக் கூறும் ஸ்லோகம்?
   1) அரங்க தேவதாஸ்துதி   2) நாட்டியக்கிரமம்
   3) குரு வணக்கம்   4) புஸ்பாஞ்சலி

8) தேவதாஸி என்பதன் கருத்து?
   1) கலைஞர்   2) அறிஞர்   3) இறைவனின் பணிப்பெண்   4) அடிமை

9) கைகளைத் தட்டி ஆடப்படுவது?
   1) கும்மி   2) கோலாட்டம்   3) ஒயிலாட்டம்   4) கரகம்

10) தண்டியம் எனப்படுவது?
   1) அறை   2) சலங்கை   3) கோல்   4) கூடம்

**(10 × 1 = 10 புள்ளிகள்)**

**02) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. நாட்டடவு | தகிட |
| 2. நேர்த்திக்கடன் | எட்டு |
| 3. திஸ்ரஜதி | ஆபரணம் |
| 4. தட்டடவு | திரிபதாகம் |
| 5. நட்சத்திரம் | காவடி |

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

**03) மிகவும் பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிகளை நிரப்புக**

**(வடமொழி, ரூபகம், சிலம்பக்கூடம், கோலாட்டம், சிவபெருமான்)**

1. நாட்டியம் கற்றுக் கொடுக்கப்படும் அறை ........................................................ என்றழைக்கப்படும்.
2. தியான ஸ்லோகம் ........................................................ அமைந்துள்ளது.
3. கோல்களைத் தட்டி ஆடப்படுவது ........................................................ ஆகும்.
4. 3வது தட்டடவின் தாளம் ........................................................ ஆகும்.
5. தியான ஸ்லோகத்தில் குறிப்பிடப்படும் இறைவன் ........................................................ ஆவார்.

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

**04) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. சாத்வீகம் என்பது பரிசுத்தம் என்று பொருள்படும். ( )
2. கால்களை நாட்டிச் செய்வது தட்டடவு ஆகும். ( )
3. இறைவனுக்குத் தொண்டு செய்வது தேவதாஸிகளின் பணியாகும். ( )
4. கைகள் செல்லுமிடத்து கண்கள் செல்ல வேண்டும். ( )
5. தொழில்சார் நடனங்களில் கரகமும் ஒன்றாகும். ( )

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

## பகுதி - II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) அ) 1) நாட்டடவு என்ற பெயர் வரக் காரணம் யாது?

2) நாட்டடவு எத்தனை வகைப்படும்?

3) நாட்டடவில் பெரும்பாலும் பிரயோகிக்கப்படும் கஸ்தம் எது?

**(2 + 1 + 2 = 5 புள்ளிகள்)**

ஆ) நாட்டியக் கிரமத்தின் ஸ்லோகத்தையும் கருத்தையும் எழுதுக.

**(5 + 5 = 10 புள்ளிகள்)**

02) அ) கிராமிய நடனம் என்றால் என்ன?

ஆ) கிராமிய நடனங்களை வகைப்படுத்துக.

இ) மகிழ்ச்சியின் பொருட்டு ஆடப்படும் கிராமிய நடனங்கள் இரண்டு தருக?

ஈ) மேற்கூறிய இரண்டு நடனங்கள் பற்றி ஐந்து வாக்கியம் எழுதுக?

**(1 + 2 + 2 + 10 = 15 புள்ளிகள்)**

03) தியான ஸ்லோகத்தைக் கருத்துடன் எழுதுக.

(சொல், பொருள் உபயோகிக்கும் முத்திரைகள் உட்பட அட்டவணையுடன்)

**(15 புள்ளிகள்)**

04) அ) கோயில் நடனமாதர் என்போர் யார்?

ஆ) இவர்களைக் குறிக்கும் மறுபெயர்கள் மூன்று தருக?

இ) கோயில் நடனமாதரினைப் பற்றிப் பதிகங்களில் உயர்வாகக் கூறியுள்ள நாயன்மார் யாவர்?

ஈ) தேவதாஸி என்பதன் பொருள் யாது?

உ) அதிக தேவதாஸிகள் கலைப் பணி புரிந்த ஆலயம் எது?

ஊ) ஏழுவகையாகப் பிரிக்கப்பட்ட தேவரடியார்களையும் குறிப்பிடுக.

**(2 + 3 + 2 + 2 + 2 + 4 = 15 புள்ளிகள்)**